**லங்கா சதொச லிமிடெட் கம்பனி - 2021**

------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

லங்கா சதொச லிமிடெட் கம்பனியின் ''கம்பனி'' 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு பெறுமதியிடும் போது கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதியில் கணக்கீடு செய்யவேண்டிய போதிலும். மீளாய்வாண்டில் ரூபா 4,903,716 ஆன | விற்பனை செய்யும் இருப்பின் தேறிய தேறக்கூடிய பெறுமதி கிரயத்தினை விட குறைவாக இல்லாதிருந்ததுடன், இருப்பு கிரயத்தில் பெறுமதியிடப்பட்டுள்ளது. தற்போது முறைமையில் காலாவதியாகிய | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த இருப்பின் கிரயம் கணக்கு இருப்பு கிரயத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், இந்த இருப்புக்களின் காலப்பகுப்பாய்வும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இருப்பை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட் காலம் சொத்தை ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் போதும் மீளாய்வு செய்ய வேண்டியிருந்ததுடன், எதிர்பார்க்கப்பட்ட நிலைமையில் மேற்கூறப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அந்த மாற்றங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டு வேறுபாடாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். எனினும், முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூபா 227,380,845 தொகை தொடர்பாக நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், எதிர்வரும் ஆண்டின் போது மீண்டும் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 227,380,845 ஆன கூட்டுத்தாபனத்தின் பெயர் பதாதை மற்றும் பொருத்தப்பட்ட கணனி துணைப் பாகங்கள், உபகரணங்கள், தளபாடங்களும் பொருத்திகளும், மோட்டார் வாகனங்கள், தொலைத்தொடர்பு உபகணங்கள், கணனி மென்பொருள்கள் தற்போது முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளதுடன், நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எந்த தாக்கமும் ஏற்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அரசாங்கத்தின் மானியமாக கிடைக்கின்றவைகளின் கணக்கீட்டு கொள்கை மற்றும் நிதி உதவிகளின் அளவை வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அரிசி இறக்குமதி செய்யும் போது பெறப்பட்ட கடனை செலுத்துவதற்காக திறைசேரியில் இருந்து கிடைத்த தொகையான ரூபா 2,295,745,706 தொடர்பாக கணக்கு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் கடன் தவணைகளில் மீளளிப்பு பெறுமதி 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் நியம இலக்கம் 20 இற்கு இணங்க வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியால் முன்னைய ஆண்டுகளின் போது தண்டணை நட்டமாக ரூபா 618,991,224 தொகை இனங்காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் அதில் ரூபா | Sports Ministry இன் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 36,453,533 இற்குரியதாக இன்னும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன், | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 267,600,500 ஆன கடன்பட்டோருடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்தது. ரூபா 351,390,724 மிகுதி பெறுமதி தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் 114 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | Liverpool Navigation (pvt) Ltd. நிறுவனத்துக்கு செலுத்தப்பட்ட முற்பண தொகையை அறவிடல் தொடர்பாக 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமான உரிய அறிக்கை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்ட பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 500,766,342 ஆக இருந்ததுடன், கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் அது ரூபா 447,194,902 ஆனமையால் பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 53,571,440 குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தது. | இந்த வேறுபாட்டிற்கு காரணமாக ஆண்டின் போது சொத்துக்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் (Improvements) பெறுமானத் தேய்வு சீராக்கத்தை காண்பிக்க முடியும். முறைமையின் மூலம் பெறுமானத் தேய்வு கணிப்பிடும் போது சரியான முறையில் Improvements மேற்கொள்ளப்பட்ட திகதியில் இருந்து பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படுவதுடன், Manual கணிப்பீடுகளின் போது இது உரிய சொத்தின் கிரயத்தில் சேர்க்கப்பட்டமையால் சொத்துக்களின் ஏ.ஜீ. காலத்திலும், பெறுமானத் தேய்வு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டமையால் இந்த முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. | சரியான முறையில் கணிப்பிடப்படல் வேண்டும். |
| (ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் 07 விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் விடயம் ரூபா 3,661,079,971 ஆக இருந்ததுடன், நிலையான சொத்து பதிவேட்டின் பிரகாரம் ரூபா 2,917,207,117 ஆனமையால் ரூபா 743,872,854 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இது 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விடயமாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் நிலையான சொத்து பதிவேடு மற்றும் பேரேட்டில் காணப்படுகின்ற பெறுமதிகளில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. | ஒப்பீட்டு ரீதியில் மற்றும் பௌதீக ரீதியில் பரீட்சித்து சரியான பெறுமதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 25,099,313 ஆன நிலையான வைப்பு வட்டி வருமானம் பெறவேண்டிய வருமானமாக காண்பிக்க வேண்டிய போதிலும், அது நிலையான வைப்பாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் நிலையான வைப்பு வட்டி வருமானம் பெறவேண்டிய வருமானமாக தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முதலீட்டு வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகளின் கூட்டு மொத்தம் ரூபா 108,881,167 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 118,046,003 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 9,164,830 வேறுபாடு, கணனி மென்பொருளை அகற்றியதால் ஏற்பட்ட நட்டமான ரூபா 31,212,686 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டிய ரூபா 40,377,522 தொழிற்படு மூலதனத்தில் சீராக்காமல் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பித்து சீராக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது இது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| விடயம் | | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | வியாபாரம் கிடைக்க வேண்டிய கணக்குகள் | 369,608,694 | 474,081,072 | 104,472,378 | கிடைக்க வேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள அநேகமான தொகைகள் அரசாங்க மற்றும் அரசாங்க நிறுவனங்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய மீதியாக இருந்ததுடன், கடனை அறவிடுதல் தொடர்பாக பிரச்சினைகள் காணப்படவில்லை. | மீதியை இணக்கம் செய்து சரியான மீதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தில் இருந்து கிடைக்க வேண்டியவை. | 10,083,353 | 89,228,613 (ச.தெ.ச இன் பிரகாரம் உறுதிப்படுத்தல்) | 79,145,260 | மீதி உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் வேறுபாடான ரூபா 79,145,260 உரியதாக மீண்டும் இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சரியான தகவல்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை | 1,826,860,899 | 2,250,219,375 (ச.தெ.ச இனால் உறுதிப்படுத்தல்) | 423,358,476 | மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் வேறுபாடான ரூபா 423,353,476 இற்கு மீண்டும் இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | இணக்கம் செய்து சரியான மீதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வியாபார செலுத்த வேண்டிய கணக்குகள் | 8,751,603,336 | 8,786,261,100 | 34,657,764 | எங்களால் Ewis நிறுவனத்தின் மூலம் இந்த வேறுபாட்டிற்குரிய அறிக்கையை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த வேறுபாட்டை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கம் செய்து சரியான மீதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | செலுத்த வேண்டிய கடன் மீதி | 9,830,760,719 | 10,367,560,020 | 536,799,301 | கடன் வட்டி கால ரீதியிலான கடன் (Term Loan) உட்படுத்தி திறைசேரியுடன் கடன் மற்றும் வட்டி தொகை செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன், அதனால் கடன் வட்டி தனியாக கணக்கீடு செய்யப்படாமல் நீண்ட கால கடனாக திரண்ட நிதிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய கடன் மீதி வங்கிகளில் உறுதிப்படுத்தல்களுடன் சமனாக இருத்தல் வேண்டும். |

### 1.5.4 கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியின் பற்றாக்குறை ரூபா 840,281,278 ஆகவும், நடைமுறை சொத்துக்களை விஞ்சிய பொறுப்புக்கள் ரூபா 6,684,218,633 ஆகவும் இருந்ததுடன், அதன் காரணமாக கம்பனிக்கு தமது சொத்துக்களில் இருந்து அதன் | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக கம்பனி |

| | | | | |
|---|---|---|---|---|
| பொறுப்புக்களுக்கு முகங்கொடுக்கும் இயலுமை மற்றும் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் இயலுமை திறைசேரி நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்ளாமல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய மானியங்கள் தவிர குறுங்கால மற்றும் நீண்ட கால பொறுப்புக்கள் ரூபா 22,751,797,451 ஆக இருந்ததுடன், இந்த பொறுப்புக்களில் அரிசி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கடன் தொகை வருடாந்த கடன் தவணைப் பணம் மற்றும் வட்டிக்காக மாத்திரம் திறைசேரி நிதிஏற்பாடு வழங்குகின்றது. | | | | செயற்படுதல் வேண்டும். |

**1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| விடயம் | | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | மோட்டார் வாகனம் | 18,821,440 | பட்டோலை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தொலைத்தொடர்பு உபகரணங்கள் | 3,642,602 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தில் கையேற்கப்பட்ட சொத்துக்கள். | 22,798,843 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் | 687,776,959 | காலப் பகுப்பாய்வு | 2022 ஆம் ஆண்டு வரையில் கடன்பட்டோர் மீதி கணிசமான அளவொன்று தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன், மீதி இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| | அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரம் மற்றும் திறைசேரி அங்கீகாரம் இன்றி ஊழியர் மருத்துவ காப்புறுதி தவணைப் பணமாக ரூபா 29,328,808 செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களை கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் ஊழியர் மருத்துவ காப்புறுதிக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறவேண்டிய மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 16,626,065 தொகை மீளாய்வாண்டின் போது கிடைக்காமையினால் உரிய அங்கீகாரம் கிடைக்காத கணக்குகளில் பதிவழிக்கப்பட்டிருந்தது. | பெற வேண்டிய மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 16,626,065 தேசிய வரவு செலவு திட்ட மூலதன செலவினங்களை மேவுகை செய்வதற்காக ஒதுக்கப்பட்ட தொகையான காண்பிக்கப்பட்டிருந்தது. இது கிடைக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்ட போதிலும், அமைச்சிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த தொகை கிடைக்காமையினால் கணக்குகளில் பதிவழிக்கப்பட்டுள்ளது. இது பொதுவாக கிடைக்க வேண்டியவைகளாக மேற்கொள்ளப்பட்ட பதிவளித்தல் (Wrtite off) அல்லாதிருந்தமையால் இதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் தேவையற்று இருந்தது. | உரிய அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 1.7 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உணவு ஆணையாளர் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட 12 கட்டிடங்களுக்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டிய நிலுவை வாடகை ரூபா 17,912,034 இனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வாடகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| i. | 7.4.5 ஆம் பந்தி | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார இருப்பு மற்றும் நுகர்வு இருப்புக்கள் முறையே ரூபா 4,903,716,133 மற்றும் ரூபா 41,944,485 ஆன இருப்புக்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் விற்பனை கடைகளை கணனி மயப்படுத்துகின்ற சந்தர்ப்பத்தின் போது பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டமையால் மீண்டும் ஆண்டின் இறுதியின் போது சகல விற்பனை கடைகளுக்காகவும் இருப்பு கணிப்பீடு மேற்கொள்ளுதல் பிரயோக ரீதியில் முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | 9.8.2 ஆம் பந்தி | ஊக்குவிப்பு படி செலுத்துவதற்காக பொது திறைசேரியின் அங்கீகாரம் பெற வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய ரூபா 40,430,262 ஊக்குவிப்பு படிக்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. | செலுத்தப்பட்ட ஒவ்வொரு சகல ஊக்குவிப்பு படிகளுக்காகவும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | 9.7 ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் சம்பளம் மற்றும் படிகள் செலுத்த வேண்டிய போதிலும், திறைசேரி அங்கீகாரம் இன்றி பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் | பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் பதவிகளுக்காக முகாமைத்துவ செவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரதி பொது முகாமையாளர் 07 பேர்களுக்கு 2021 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட செயலாற்றல் படி ரூபா 5,290,000 ஆகும். | அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2015 மே 25 ஆம் திகதிய இலக்கம் 1/2015 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கம்பனியால் திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் உத்தியோகபூர்வ வாகனங்களை பயன்படுத்துவதற்கு உரித்தற்ற உத்தியோகத்தர்களுக்காக ரூபா 12,500 வீதம் 14 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 1,775,000 ஆன போக்குவரத்து படிகள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு போக்குவரத்து படி அங்கீகரித்துக் கொள்வதற்கான விடயங்கள் தெளிவாக கடிதம் ஒன்றில் அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2017 பெப்ரவரி 22 ஆம் திகதிய DMS/1744 ஆம் இலக்கம் மற்றும் 2017 மே 16 ஆம் திகதிய DMS/1741 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்காக ரூபா 250,000 மாதாந்த படியொன்று பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி பிரதி பொது முகாமையாளருக்காக ரூப 150,000 மாதாந்த படியும் செலுத்தப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் போது அங்கீகாரம் இன்றி மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 5,795,000 ஆகும். | 2019 செப்டம்பர் 10 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 15 ஆம் திகதிய PED 03/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க | கம்பனியின் பதவி அணியினருக்கு செலுத்த வேண்டிய வருடாந்த மிகை ஊதியப் படி ரூபா 5,000 ஆக இருந்த போதிலும், திறைசேரி அங்கீகாரம் இன்றி ரூபா | செலுத்தப்பட்ட சகல மிகை ஊதிய படிக்காகவும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், இதற்காக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| பொது சுற்றறிக்கை | முயற்சிகள் | 30,000 வீதம் 3267 ஊழியர்களுக்கு ரூபா 97,526,998 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 81,191,998 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | செலவான சகல பணமும் நிறுவனத்தில் இருந்து உழைக்கப்பட்ட பணமாகும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 840,281,278 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,387,666,643 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் 547,385,365 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு மதுபான விற்பனை வருமானம் தவிர ஏனைய பிரதான வருமானங்கள் ஐந்தில் ரூபா 22,433,501,047 அதிகரிப்பும், வட்டி செலவினத்தில் ரூபா 99,994,213 குறைந்தமையும் பிரதான காரணங்களாக இருந்தது.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

கம்பனியின் இரண்டு வருடங்களினதும், மீளாய்வாண்டினதும் விகிதாசார பகுப்பாய்வு பின்வருமாறு.

| ஆண்டு | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | 11% | 10.6% | 11.6% |
| தேறிய இலாப விகிதம் | (12%) | (3.9%) | (2.07%) |
| நடைமுறைச் சொத்து விகிதம் | 0.52 | 0.6 | 0.5 |
| பெறுமானத் தேய்வு விகிதம் | 0.16 | 0.23 | 0.13 |
| கடன் விகிதம் | 1373.39% | 1600.17% | 674.94% |

மேற்கூறப்பட்ட விகித பகுப்பாய்வின் பிரகாரம் கடந்த ஆண்டுகளின் போதும் மீளாய்வாண்டின் போதும் தேறிய இலாபம் ஒன்று அறிக்கையிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது 12 சதவீதம் ஆன தேறிய இலாப விகிதம் 2020 ஆம் ஆண்டின் போது 3.9 சதவீதம் வரை குறைவடைந்திருந்ததுடன், மீளாய்வாண்டின் போது மேலும் 2.07 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. கடந்த ஆண்டுகளில் நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு நடைமுறை பொறுப்புக்கள் சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப் பொறுப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது நடைமுறைச் சொத்து விகிதம் 1:0.5 மற்றும் விரைவு விகிதம் விரைவு விகிதம் 1 : 0.13 வரை மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த நிலைமை கம்பனியின் தொழிற்படு மூலதன நலிவினை ஏற்படுத்துவதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. கடன் விகிதம் 2019 ஆம் ஆண்டின் போது 1373.39 முதல் 2020 ஆம் ஆண்டின் போது 1600.17 வரை அதிகரித்திருந்தது. அந்த விகிதம் மீளாய்வாண்டின் போது 674.94 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 யூலை மாதத்தின் போது மாதத்திற்கு ரூபா 611,000 வாடகை பெறப்பட்ட உணவு திணைக்களத்தின் உருகொடவத்தை இலக்கம் 08 மற்றும் 09 களஞ்சியத்திற்காக உடன்படிக்கையின் பிரகாரம் மின்சாரம் வழங்கப்படாமையின் காரணமாக மின்பிறப்பாக்கி இயந்திரத்தில் எரிபொருளுக்காக 2020 யூலை மாதம் முதல் 2022 ஏப்ரல் வரை ரூபா 2,005,533 செலவிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் உரிய சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 சனவரி 26 ஆம் திகதி வரை கம்பனியின் அமுல்படுத்தப்பட்டிருந்த ஒன்றிணைந்த நிறுவன வளத்திட்ட முறைமை (Integrated Enterprise Resource Planning) புதிய முறைமைக்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும், முன்னர் காணப்பட்ட முறைமைக்காக வேலை பூர்த்தி அறிக்கை இன்றி ஒப்பந்த காரருக்கு ரூபா 83,233,830 செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டு வரை ரூபா 52,021,124 பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. எனினும் பழைய முறைமையை அகற்றுவதற்கு உரிய முகாமைத்துவம் தீர்மானம் எடுக்காமையின் காரணமாக செயலாற்றல் காப்பீட்டை மேவுகை செய்ததன் பின்னரும் ரூபா 11,395,108 நட்டம் ஏற்பட்டிருந்தது. முன்னர் காணப்பட்ட ஒப்பந்தம் காண்பிக்கப்படாமல் பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக ஒப்பந்தகார கம்பனிக்கு எதிராக ரூபா 114,941,955 இழப்பீட்டு தொகை கோரி வழக்கு தொடரப்பட்டுள்ளது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சரியாக முகாமைத்துவம் தீர்மானம் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கிளிநொச்சி, வெலிசற மற்றும் கும்புறுப்பிடி போன்ற பிரதேசங்களில் அமைந்துள்ள 03 காணிகள் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது கிரயம் ரூபா 361,921,862 ஆன கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | **கிளிநொச்சி**<br>கூட்டுறவு மற்றும் உள்ளக அமைச்சுக்கு 131.49 பேர்ச் காணி கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>**வெலிசற**<br>கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு சொந்தமாக இருந்ததுடன், வாடகை மாத்திரம் செலுத்தப்படுகின்றது.<br>**கம்புறுபிட்டி**<br>கம்புறுபிட்டி பிரதேச சபைக்குரிய இந்த காணி 2014 – 2034 உடன்படிக்கை செய்து இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முன் உரித்திணை கையேற்றல் வேண்டும். |
| (ஈ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கம்பனிக்கு 15 உள்நாட்டு பானங்கள் விற்பனைக் கடைக்காக அனுமதி பத்திரம் வழங்கப்பட்டிருக்கும் போது கூட்டுமொத்தமாக ரூபா 8,800,044 களஞ்சியம் மற்றும் சதேச சுநவயடை லிமிடட் என்ற பெயரில் விநியோகிக்கப்பட்ட உள்நாட்டு பானங்களில் 7 கடைகளுக்காக அனுமதிப் பத்திர கட்டணமாக அந்த கம்பனிக்கு செலுத்த வேண்டிய கூட்டு மொத்தமான ரூபா 5,020,024 இறையும் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | CWE Retail (Pvt) Ltd பெயரில் நிறுவனம் ஒன்று நடாத்திச் செல்லப்படாமையினால் கம்பனிக்கு கையளிக்க வேண்டியிருந்ததும் மற்றும் தற்போது கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் கீழ் காணப்படுகின்ற உள்நாட்டு குடிபானங்களின் விற்பனை சந்தை கடை அனுமதிப் பத்திரத்திற்காக மாத்திரம் இறை செலுத்தப்படுகின்றது. | அனுமதி பத்திரம் கம்பனியின் பெயரில் விநியோகிக்கப்பட்டமையினால் கம்பனியால் இறை செலுத்துதல் தேவை ஏற்படவில்லை. |
| (உ) | கம்பனியால் வங்கி கடன் பணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்கு பொறுப்பாக இருந்தமையின் காரணமாக தண்டப் பணம் ரூபா 1,803,346 செலுத்தப்பட்டிருந்தது. | இந்த பிரச்சினை தொடர்பாக வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஆண்டின் போது இந்த பிரச்சினை தீர்க்கப்படும். | கம்பனிக்கு நட்டம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சுங்கத்தில் இருந்து அரசுடமையாக்கப்பட்ட ஏலமின்றி கம்பனியால் ரூபா 5,760,300 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட கிலோ கிராம் 54,860 ஆன பூண்டுகளின் இருப்பு 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதி மற்றும் செப்டம்பர் 02 ஆம் திகதி தரப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் இருப்பாக மற்றும் குறுகிய காலத்தின் போது விற்பனை செய்ய வேண்டும் என பரிந்துரை செய்யப்படாதிருந்த போதிலும், 2021 செப்டம்பர் 07 ஆம் திகதிய தரப் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் விரைவாக பகிர்ந்தளிக்க வேண்டிய இருப்பாக விற்பனை செய்தல் அல்லது ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கம்பனியின் பொருள் இருப்பாக விற்பனை செய்யும் முறைமை அல்லது கொள்கை தயாரிக்கப்படாதிருந்த போதிலும், இருப்பாக விற்பனை செய்வதற்காக 03 கேள்விகள் பெறப்பட்டிருந்தது. 2021 யூலை 21 ஆம் திகதிய நிறைவேற்று குழு தீர்மானத்தின் பிரகாரம் சகல விற்பனை நடவடிக்கைகளும் செயற்பாட்டு பிரிவின் மூலம் மேற்கொள்ள வேண்டியிருந்த போதும், விலை தீர்மானத்திலும் முறையாக இன்றி பிரதி பொது முகாமையாளர் (நிதி) இனால் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், பொருட்களை விற்பனை செய்யும் போது கணக்கீட்டு முறைமை ஊடாக மேற்கொள்ள வேண்டிய போதிலும், இந்த பூண்டு இருப்பு கணக்கு முறைமைகள் மூலம் சிட்டைகள் விநியோகிக்கப்படாமல் விற்பனை செய்யப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கொடுக்கல் வாங்கல்களை முறையாக மேற்கொள்கின்ற முறையில் செயற்பாடுகள் தயாரிக்க வேண்டியிருந்ததுடன், அதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரிடம் இருந்து குறித்துரைத்தரீதியில் சரியான மேற்பார்வை ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இருப்பு இழப்புக்கள் ரூபா 157,989,851 ஆக இருந்ததுடன், அந்த இருப்பு இழப்பிற்காக காப்புறுதி மேவுகை ரூபா 1,641,050 மற்றும் ஊழியர்களிடம் இருந்து ரூபா 2,004,423 அறவிடப்பட்டிருந்ததுடன், தேறிய நட்டம் ரூபா 154,344,377 ஆகும். இருப்பு நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கும் இருப்பு குறைவு குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையும் | ஒரு இருப்பு எண்ணிக்கை கணிப்பிடுதல் முதல் மேலும் இருப்பு கணிப்பிடுவதற்குரிய காலத்தில் வெளிப்படுத்தப்படும் இருப்பு பெறுமதியை அடிப்படையாகக் கொண்டே குறைவிற்காக விசாரணை நடவடிக்கைகள் | இருப்பு நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிய தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படுகின்றமை யால் அந்த காலத்தில் 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் ஏற்படுகின்ற இருப்பு குறைவாக கவனத்தில் கொள்ள முடியாதிருந்தது. | |

**3.3 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.2(இ), 6.3.3(அ), 8.12.3, 8.9.1(ஆ) வழிகாட்டிக்கு புறம்பாக 12 மடி கணனிகளை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,728,000 செலவிடப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தம் குறித்துரைத்த திகதியில் நிறைவேற்றாமையின் காரணமாக தாமதக் கட்டணம் ரூபா 86,640 அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த பெறுகைகளுக்குரிய தேவை மற்றும் மாதிரிகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாலேயே அனுப்பப்பட்டுள்ளது. இந்த காலத்தின் போது ஏற்பட்டிருந்த தேவையை கவனத்தில் கொண்டு தலைவரால் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு கொள்வனவுப் பிரிவின் திணைக்கள தலைவருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட பொருட்கள் மாதிரிகளுக்கு இணங்கியிருந்தமையால் இந்த பொருட்கள் கையேற்கப்பட்டிருந்தது. அந்த கால எல்லையில் காணப்பட்ட தேவையினால் எழுத்துமூல உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் ஏற்படுகின்ற போது உரிய தண்டப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பெறுகைகள் வழிகாட்டியின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | E-wis கணனி முறைமை ஸ்தாபிப்பதற்காக தேவையான கணனி மற்றும் துணைப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது விற்பனை கடைகளை தேவையகள் இனங்காணப்படாதிருந்ததுடன், தகவல் தொழில்நுட்ப பிரிவின் முகாமையாளரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் 76 கணனிகள் ரூபா 7,649,900 தொகையில் கொள்வனவு | இந்த பெறுகைகளுக்காக செயலாற்றல் காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை. திறந்த கேள்வி குழு பிரதான நிறைவேற்ற உத்தியோகத்தரினால் நியமிக்கப்பட்டிருந்தார். கையளிப்பு கடிதத்திற்கு பதிலாக கட்டளை படிவம் விண்ணப்பட்டிருந்தது. நிராகரிக்கப்பட்ட கேள்வி தாரருக்கு காரணம் தெரிவிக்கும் வரை எந்தவொரு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. இந்த பெறுகைகளின் போது பெறுகைகள் வழிகாட்டி 5.4.10(ஆ), 6.3.3(அ), 8.7.1(ஆ), 8.9.1(ஆ) மற்றும் 8.12.1(ஆ) என்பவற்றுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 76 கணனிகளில் 50 ஐ மாத்திரம் வழங்கியதன் காரணமாக மீண்டும் கூறுவிலை கோராமல் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரர்களிடம் இருந்து 13 மற்றும் 13 ஆக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கேள்விதாரர்களுடன் எழுத்துமூல உடன்படிக்கையில் கைச்சாத்திடாமையினால் ஒப்பந்தகாரர் புறக்கணித்தமைக்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு கம்பனிக்கு முடியாதிருந்ததுடன், அதிக விலையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 513,500 நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தத்தை நிறைவேற்றாத ஒப்பந்த காரரிடம் இருந்து ரூபா 713,643 தாமதக் கட்டணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகளுக்கும் உரித்தாக்கப்படவில்லை. இந்த பெறுகைகள் மேற்கொள்ளப்பட்ட கால எல்லையில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக நடமாடும் வரையரைகள் விதித்தமையின் காரணமாக ஆகக் குறைந்த ஊழியர் எண்ணிக்கை கடமைகளுக்காக அறிக்கையிடப்பட்ட காலப் பகுதியாகும். மேலும் இந்த செயற்திட்டத்திற்குரிய கால அட்டவணையின் பிரகாரம் 2021.03.01 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காக தேவையான கணனி துணைப்பாகங்கள் கூடிய விரைவில் வழங்க வேண்டியிருந்தமையால் அதற்காக உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான காலம் காணப்படாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | |
| (இ) | ஜா எல மெகா விற்பனை நிலையத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது பெறுகைகள் வழிகாட்டி 2.3.2(இ), 2.5.1(இ), 2.6.1(அ), 4.2.2, 6.2.2, 8.9.1(அ)(ஆ) இற்கு முரணாக 2021 மே 05 ஆம் திகதி ரூபா 3,364,706 தொகையில் மின்பிறப்பாக்கி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த இயந்திரம் கிடைத்த 2021 செப்டம்பர் வரை தாமதம் அடைந்ததன் காரணமாக முன்னர் ரூபா 150,000 வாடகையை பெறப்பட்ட இயந்திரத்திற்கு வாடகையாக ரூபா 650,000 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும், பொருள் வழங்குதலில் தாமதத்தின் காரணமாக அறவிட வேண்டிய ரூபா 164,235 தாமதக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது கம்பனியின் 32 விற்பனை கடைகள் புதிதாக திறக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணைந்ததாக பதவி அணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக 1,233 பதவி அணியினரில் பற்றாக்குறையும், அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக ஆட்சேர்த்தமையின் காரணமாக 502 பேர்களின் மிகையும் காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் புதிய ஆட்சேர்ப்புக்கள் கைவிடப்பட்டிருந்தன. 2021.11.02 அமைச்சரவை (அமப/21/1835/313/064) இன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியில் காணப்படுகின்ற ஆரம்ப சேவை தொகுதியின் வெற்றிடங்களுக்காக தேவையான ஊழியர்களில் அநேகமான அபிவிருத்தி பணிகளை கவனத்தில் கொண்டு பல்நோக்கு அபிவிருத்தி படையணி திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்ட போதிலும், பொறுப்புவாய்ந்த கடமைகளுக்காக ஈடுபடுத்துதல் நடைமுறையில் வசதியீனமாக இருந்தது.<br><br>MA-3 மற்றும் MA-4 சேவைத் தொகுதியின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்காமையின் காரணமாக விற்பனை கடைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட உதவி கடை முகாமையாளர் மற்றும் முகாமையாளர் போன்ற பதவிகளுக்காக ஊழியர் பதவி உயர்வை வழங்க முடியாமையின் காரணமாக வியாபார உதவி தொகுதியின் ஊழியர்களின் மிகையை குறைத்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | பொறுப்புவாய்ந்த அத்தியாவசிய கடமைகளுக்காக தேவையான பதவி அணியினர் தேவையை பூர்த்தி செய்வதற்கும், மிகை பதவி அணியினரை அங்கீகரித்துக் கொண்டதன் பின்னர் உள்ளீர்ப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 யூலை 30 ஆம் திகதிய இலக்கம் 108 பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரதி பொது முகாமையாளர் (விற்பனை) பதவி Head of Online Trading பெயரில் மாற்றப்பட்டிருந்தது. எனினும், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் இவ்வாறான பதவியொன்று காணப்படாதிருந்ததுடன், | பிரதி பொது முகாமையாளர் (விற்பனை) பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து விண்ணப்பதாரர் ஒருவருக்கு கையளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கடமைகளுக்கு பொருத்தமான | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் அந்த பதவி உள்ளடக்கி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் |

| | | |
|---|---|---|
| புதிய பதவி பெயரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட பதவிக்கு அங்கீகரிக்க்பபடாத சம்பளம் 2021 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2022 செப்டம்பர் 25 வரை ரூபா 2,875,000 ஆக இருந்தது. | பதவியொன்றின் கீழ் ஆட்சேர்ப்பதற்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரர் ஒப்பந்த அடிப்படையில் Head of Online Trading பெயரில் புதிய பதவியொன்றின் கீழ் ஆட்சேர்ப்பதற்கும் அதற்காக அவருக்கு போட்டியாளர் சம்பளமொன்றை வழங்குவதற்கான அனுமதி மற்றும் ஆலோசனையின் அடிப்படையில் பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதி பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்கும் வரைவு ஆண்டறிக்கையுடன் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2023 பெப்ரவரி 17 ஆம் திகதி அதாவது 12 மாத தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக விற்பனை சாலைகளில் கணிசமான அளவு தற்காலிகமாக மூடி வேண்டி ஏற்பட்டிருந்ததுடன், ஆகக் குறைந்த ஊழியர் எண்ணிக்கையில் நடவடிக்கைகள் பேணிச் செல்லப்பட்டமையால் அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட போக்குவரத்து கஷ்டங்களின் காரணமாக ஆகக் குறைந்த ஊழியர் எண்ணிக்கையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டமையால் விநியோக சேவைகள் இடம் பெறாமையினால் விற்பனைசாலைகளில் பிரதான அலுவலகத்திற்கு கிடைக்க வேண்டிய ஆவணங்கள், பட்டியல்கள், GRN, சில்லறைக் காசு, நாளாந்த விற்பனை அறிக்கை போன்றவை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன், முறைமையில் தரவுகளை உள்ளடக்குதலும் தாமதமடைந்திருந்தது. இதன் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காரணமாக நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய இலக்கம் 01/2014 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியால் 2020 – 2023 காலப் பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன், கடந்த மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வு மற்றும் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள் நோக்கங்கள் தொடர்பாக முகாமையாளர்களின் பொறுப்புக்கள் தெளிவாக இனங்கண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் குறிகாட்டி என்பன இந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது கூட்டிணைந்த திட்டம் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அவ்வப்போது விநியோகிக்கப்படுகின்ற சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |